ஜுலை 11

## புகழ்ச்சி

**அப்போஸ்தலர் 14:8-18**

பவுலும் பர்னபாவும் எல்லா எதிர்ப்புகளுக்கும் பிறகு பெற்ற இப்புகழ்ச்சி சற்றும் எதிர்பாராதது (வச11,12). அவர்கள் கடவுளாகவே பூஜிக்கப்படும் மேன்மையான நிலை. ஆனால் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பட்டிருந்த அவர்கள் மனிதருக் கல்ல தேவனுக்கே மகிமையைச் செலுத்த வேண்டும் என்பதை திட்டமாக அறிந்திருந்தார்கள். பெருமிதம் கொண்டு சுய ஆதாயம் தேட அவர்கள் முயற்சிக்கவில்லை.



தேவனை வஞ்சித்துப் பெறும் சுய மகிமை நீண்டநாள் நிலைக்காது என்பதால் மக்கள் தங்களைத் தவறாகப் புரிந்து கொள்ளாமலிருக்க மற்றொரு முறை தங்கள் செய்தியை தெளிவாக எடுத்துரைத்தார்கள்.

**சோதனை** - நீ உண்மையாகவே பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்படுகிறாயா என்று அறிய வேண்டுமா? பிறர் உன்னை புகழும்போது பவுலைப் போல உன்னைத் தாழ்த்துகிறாயா?

அப்போஸ்தலர் 14:10

ஜுலை 12

## தேவனது பணி

**அப்போஸ்தலர் 14:19-28**

பகைவர்கள் ஒருபுறம் எதிர்க்க தேவனுடைய பயணமும் பணியும் தடைபடாமல் நடைபெற்றது.

**அது மக்களை இரு பிரிவாக்குகிறது. (வச.4) :** அவரை நம்புகிறவர்களோடு நாம் சந்தோஷமாகச் சேர்ந்து கொள்ள உதவுகிறது.

**அது சீஷர்களை உருவாக்குகிறது (வச.22) :** இயேசுவைப் பின்பற்றுபவனை விட சீடனிடம் அதிகமாக எதிர்ப்பார்க்கப்படுகிறது. அவன் கற்றுக்கொள்வதோடு விசுவாசத்தோடும் அர்ப்பணிப்போடும் அவரையே ஆராதிக்க அவனைத் தூண்டுகிறது.



**அது பல துன்பங்களைக் கொண்டு வருகிறது (வச.19) :** நமது கைகள் அழுக்காகும், உடலில் காயங்கள் ஏற்படும். கால்கள் வலிக்கும். அது சாய்வு நாற்காலி அனுபவம் அல்ல.

**அது கட்டளை கொடுக்கிறது (வச.23) :** சீடர்கள் தங்களை ஒரு ஒழுங்குக்குள் அமைத்து தேவனால் நியமிக்கப்பட்ட தலைவர்களின் கீழ் கட்டுப்பட்டு நடக்கச் செய்கிறது.

அப்போஸ்தலர் 14:23